# மூவர் தமிழும் சைவ நெறியும்



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திரு. சி. ரமணராஜா**
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

**திருமதி வானதி பகீரதன்**
விரிவுரையாளர்,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**செல்வி கௌரீ புண்ணியமூர்த்தி**
விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
கிழக்குப் பல்கலைக் கழகம்

**திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
முதுநிலை விரிவுரையாளர்,
மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**திருமதி சாந்தி கேசவன்**
முதுநிலை விரிவுரையாளர், இணைப்பாளர்,
இந்துநாகரிகக் கற்கைகள் புலம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# சம்பந்தர் பாடல்களில் இதிகாசக் குறிப்புகள்

கௌரி புண்ணியமூர்த்தி

தமிழகச் சைவமரபிலே மிகப்பிரபல்யமாக விளங்குபவர்களில் திருஞானசம்பந்தர் முதன்மையானவர். தேவார முதலிகளில் முதல்வராகப் போற்றப்படுகின்ற இவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார். பக்திச்சுவை பொருந்திய இசைப் பாடல்களினாலே சிவபெருமானை வழிபட்டுச் சிறப்புப் பெற்றவர். அவற்றின் மூலம் ஏனையவர்களும் இறைவனின் ஈடற்ற அன்பையும் அருட்பிரவாகத்தையும் உணர்ந்து ஆன்ம ஈடேற்றம் பெற வழிவகுத்தவர். அவைதீக சமயம் உச்சம் பெற்றிருந்த தமிழ் நாட்டில் வேதநெறியும் சைவத்துறையும் வளர்ச்சி பெற அயராது செயற்பட்டார். சம்பந்தர் பதிகத்தின் பொருளமைப்பு தனித்தன்மையுடையதாய், இது சம்பந்தரது பதிகமே எனக் காட்டும் இயல்புடையதாய் விளங்குகின்றது. அவற்றில் மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசக் குறிப்புகளை அவர் அதிகளவில் பயன்படுத்தியுள்ளமையானது ஆராய்விற்குரியது.

சைவத் திருமுறைகள் வாழ்வினைச் செம்மைப்படுத்தி, மக்களைத் தெய்வத் திருநெறிக்கண் கொண்டு சென்று சேர்ப்பன. உள்ளன்போடு

ஓதுவார்க்குப் பிறவித் தளையைக் கெடுத்துத் துன்பம் அகற்றி எல்லையில்லா ஆனந்தம் தருவன. இறைவன் அடியார்களுக்கு அவ்வப்போது தோன்றி அருள் செய்த பேரருளையும் இனிது விளக்கி, அவனிடத்தில் அன்பு விளையச் செய்வன. தேவார முதலிகள் பாடியருளிய திருமுறைகள் ஏழும் 'மூவர் பாடல்கள்' என்றும் 'முக்கனிகள்' என்றும் போற்றப்படும். 'தேவாரம்' என்பது (தே+வாரம்) சிவபிரானிடத்து அதனை ஓதுவார்க்குங் கேட்பார்க்கும் அன்பை உண்டு பண்ணுவது எனப் பொருள்படும்.

வேதங்களின் சாரமாக அமைந்த உபநிடத் காலத்துக்கும், சமயச் சார்புடைய உலகியலைக் கூறும் காவியங்கள், நாடகங்கள், உரை நூல்கள் என்பன எழுந்த காலத்துக்கும் இடையே தோன்றிய இலக்கியங்கள் இதிகாசமாகும். சப்த தாராவளி எனும் நிகண்டு இதிகாசம் என்பதை இதிஹ - பரம்பரையாக வந்த உபதேசம்,ஆஸன் - அதன் இருப்பு எனக் கூறப்படுகின்றது. அதாவது பரம்பரையாக வந்த உபதேச நல்வழியில் நிலைத்து வாழ்ந்து வந்தோரது ஒழுக்கத்தின் இருப்பு இதிகாசம் எனப்படுகின்றது. இதிகாசம் ஐந்து. இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம், வித்யாரகசியம், பிரஹ்மஜ் ஞானகுகோதயம் என்பன அவையாகும். இவற்றில் இராமாயணம், மகாபாரதம் தவிர ஏனையன நமக்குக் கிடைக்கவில்லை. இவ்விரண்டிலும் இராமாயணமே காலத்தால் முந்தியது.

இராமாயணம் 24000 சுலோகங்களையும், ஏழு காண்டங்களையும், 500 சருக்கங்களையும் கொண்டது. இதன்மூலம் சமய சிந்தனைகள், தத்துவக் கருத்துக்கள், ஞானிகளின் வரலாறு, தவத்தின் பெருமை, ஆச்சிரம வாழ்க்கை, தர்மத்தின் சிறப்பு, விரதம், யாகங்கள் போன்ற வரலாறுகளை அறியமுடிகின்றது. மகாபாரதம் ஆதி பருவம் முதல் சுவர்க்க ஆரோகண பருவம் வரை பதினெட்டுப் பருவங்களையும், 126000 சுலோகங்களையும் உடையது. இது கௌரவருக்கும் பாண்டவருக்குமான போராட்டத்தை வெளிப்படுத்தும் வீரகாவியமாகும்.

### 1. சம்பந்தர் பாடல்களில் இராமாயணச் செல்வாக்கு

#### 1.1 இராவணன்:

இராவணன் இராமாயணத்தின் காப்பியத் தலைவனாகிய இராமனுக்குச் சிறந்த எதிர்நாயகனாக விளங்குபவன். இராவணன் என்ற வடசொல்லுக்கு

கதறியவன் என்பது பொருளாகும். அதன் தமிழ்மொழி அர்த்தம் ‘கரிய நிறத்தவன்’ என்பதாம். இவன் பிரமன் வழிவந்த விசிரவசுவிற்குக் கேகசியினிடம் பிறந்தவன். பத்துத் தலைகளைக் கொண்டிருந்தமையால் தசக்கிரீவன் என்றும் தசமுகன் என்றும் அழைக்கப் பெற்றான். இவனது மனைவி மண்டோதரி. தங்கை சூர்ப்பணகை, தம்பியர் கும்பகர்ணன் மற்றும் விபுடணன் என்போராவர். இந்திரசித்து, அதிகாயன், அட்சய குமாரன் ஆகியோர் பிள்ளைகளாவர்.

இராவணன் வீணைக் கொடியுடையவனாய்க் கடல் சூழ்ந்த இலங்கையைப் பெருமிதத்துடன் ஆண்டான். தன்பேராற்றலால் திக் விஜயம் மேற்கொண்டு மூன்று உலகங்களையும் அடிபணிய வைத்தான். தவத்தால் கிடைத்த வரத்தின் வலிமையால் இராவணன் தன் நாட்டைப் பொன் கொழிக்கச் செய்தும், தேவர்களை அடக்கியும் நின்ற அவனது திறமையினை கம்பர், ‘மரம டங்களும் கற்பகம், மனையெலாம் கனகம், அரமடந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர், உரமடங்கிவந் துழையராய் உழல்குவர் ஒருவர், தரமடங்குவதன்றிது தவஞ்செய்த தவமால்’(சுந்தர காண்டம்:ஊர்தேடு.10) என்றகூற்றால் தெளிவாகின்றது.

இராவணன் சிவபிரானுக்கு அடியவனாக சிவ பூசை புரிந்த சிறப்புடையவன். இருப்பினும் ஒருமுறை தனக்குப் பல மேன்மைகள் தந்தருளிய சிவனது திருக்கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முனைகின்றான். அப்போது நந்திகேசுவரர் கூறிய அறிவுரையையும் அவன் பொருட்படுத்தவில்லை. அவரது சாபத்திற்கு ஆளாகிய நிலையில் கயிலையைப் பெயர்க்கும்போது உமையம்மையுடன் அம்மலையில் வீற்றிருந்த சிவன் தன் கால் விரல் நுனியால் சிறிதே அழுத்தினார். அதன் கீழ் மாட்டிக்கொண்ட இராவணன் தவித்துப் புலம்புகின்றான். அப்போது சமயத்திற்குத் தக்கவாறு தனது தலைகளுள் ஒன்றையெடுத்து வீணையாகவும், தன் நரம்புகளையே வீணை நரம்பாகவும் ஆக்கிக் கொண்டு சிவனுக்கு உவப்பான சாமகானம் வாசித்து சிவனை குளிர்மைப்படுத்த முயற்சித்தான். அவனது இசைக்கு அடிபணிந்த எம்பிரானும் மகிழ்ச்சியுற்று விடுவித்தார்.

### 1.1.1 இராவணன் கயிலை மலை பெயர்த்தமை

இராமாயணத்தில் பலவிடங்களில் இராவணனது புகழ் எடுத்துரைக்கப்படுகின்றது. அவனது வீரம், பெருமைகள், சாதனைகள், திறமை என்பனவற்றை பல்வேறு பாடல்களினூடாக அறிந்துகொள்ள முடிகின்றது.

கம்பர் வாயிலாகவும் சூர்ப்பணகை ஆகிய கதாபாத்திரங்கள் வாயிலாகவும் தன் கூற்றாகவும் இவனது சிறப்புக்கள் பாடப்படுகின்றன. அவ்வாறு, பல்வேறு புகழையும் சிவபெருமான் மீது மிகுந்த பக்தியும் கொண்ட இராவணன் ஒரு தடவை புத்தி தடுமாறி சிவனும் உமையும் உறைகின்ற கைலாய மலையை நகர்த்தினான். இச்சம்பவம் பற்றி இராமாயண ஆசிரியர் பல இடங்களில் குறிப்பிடுகின்றமை இராவணனின் சிறப்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது.

வனத்திலே இராமனைக் கண்டு ஆசைகொள்ளுகின்ற சூர்ப்பணகை தமது உண்மையுருவம் மறைத்து, பொய்யுருக் கொண்டு தாம் யார் என்பதை இராமனுக்கு அறிமுகம் செய்கின்ற போது இராவணனது சிறப்புக்களைக் கூறி, அவனது தங்கை தாமென அறிமுகமாகின்றாள்.

> *"....திக்கின்மாஎலாம் தொலைத்து, வெள்ளிமலை*
> *எடுத்து, உலகம் மூன்றும்காவலோன் பின்னை; காமவல்லி ஆம்*
> *கன்னி என்றாள்"* (கம்.இரா: ஆரணிய காண்டம்: பா.எ: 2770)

அதாவது எட்டுத் திசைகளிலுமுள்ள யானைகளின் வலிமையெல்லாம் இழந்து ஓடச் செய்து வெள்ளி மயமான கயிலை மலையைப் பெயர்த்தெடுத்து மூன்று உலகங்களையும் காக்கும் திறம்படைத்த இராவணனின் பின் பிறந்த தங்கை காமவல்லி எனும் பெயருடைய கன்னி என்று கூறுகின்றாள்.

சூர்ப்பணகை இராவணனை விளிக்கும் போது ".....தழல் எடுத்தான் மலை எடுத்த தனி மலையே" (கம்.இரா: ஆரணிய காண்டம்: பா.எ: 2832)

- 'தீயைக் கையில் ஏந்திய சிவனின் கைலை மலையைக் கையால் எடுத்த ஒப்பற்ற மலை போன்றவனே' என்கின்றாள்.

சீதையைக் கவர்ந்து செல்லும் நோக்கத்தோடு முதியவன் போன்ற தோற்றத்தில் வேடமிட்டு வந்த இராவணன், பிராட்டியிடம் தம்மைத்தாமே புகழ்ந்துரைக்கின்றபோது மேல்வருமாறு கூறுகின்றான்.

*"ஈசன் ஆண்டு இருந்த பேர்இலங்கு மால் வரை*
*ஊசி- வேரோடும் பறித்துஎடுக்கும் ஊற்றத்தான்:*
*ஆசைகள் சுமந்த பேர் அளவில் யானைகள்*
*பூசல் செய் மருப்பினைப்போடிசெய் தோளினான்"*

*(கம்.இரா: ஆரணிய காண்டம்:பா.எ: 3360)*

*"நாரி பாகத்தான் வாளுடைத் தடக் கையன்"*

*(கம்.இரா: ஆரணிய காண்டம்: பா.எ: 3363)*

*"விழிதரு நெற்றியான்தன் வெள்ளிவெற்பு எடுத்த தோட்குப்*
*பழிதரும்"*

*(கம்.இரா: ஆரணிய காண்டம்: பா.எ: 3363)*

இவற்றில் கயிலை மலையெடுத்தமை மூலம் தமது பலம் வெளிப்படுமாற்றை இராவணன் கூறுகின்றான். இராவணன் பற்றிய குறித்த சம்பவத்தை திருஞானசம்பந்தர் தமது பதிகம்தோறும் பாடுகின்றமை சிறப்பிற்குரியது.

### 1.1.2 சம்பந்தர் பாடல்களில் இராவணன் பெறும் முக்கியத்துவம்

சம்பந்தரது மூன்று திருமுறைகளிலும் மொத்தமாக 384 பதிகங்கள் உள்ளன. அவற்றில் 23 பதிகங்கள் தவிர்ந்த அனைத்துப் பதிகத்திலும் இராவணனைப் பற்றிப் பாடுவதை சம்பந்தர் பின்பற்றியுள்ளார். அவரது பதிகம் ஒவ்வொன்றிலும் வருகின்ற எட்டாம் பாடலில் இராவணன் பற்றிய

குறிப்பைக் காணமுடிகின்றது. சில பதிகங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட பாடல்களிலும் இராவணன் பற்றிய தகவல்கள் உள்ளன. அவன் வெள்ளியங் கிரியெடுத்து அதன்கீழ் நசியுண்டதும், அதன் பின் அவன் சாமகானம் பாடி சிவனருள் பெற்றமையுமே பொதுவாக சம்பந்தரால் பாடப்படுகின்றது.

*"வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த*
*உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்*
*துயரிலங்கும்முல கிற்பலவூழிகள் தோன்றும்பொழுதெல்லாம்*
*பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே."*

*(முதலாம் தி.மு: திருப்பிரமபுரம்: பா.எ:8)*

அதாவது கயிலை மலையைப் பெயர்த்துத் தனது பெருவீரத்தை வெளிப்படுத்திய புகழால் உயர்ந்த இலங்கை மன்னன் இராவணனின் வியர்வை தோன்றும் மலை போன்ற தோள்களின் வலிமையை அழித்த எனது உள்ளம் கவர்கள்வன், துயர் விளங்கும் இவ்வுலகில் பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம் அழியாது தன் பெயர் விளங்கும் பிரமபுரம் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ! என்ற பொருள்பட சம்பந்தர் பாடுகின்றார்.

*"தேரார்தரு திகழ்வாளெயிற் றரக்கன்சிவன் மலையை*
*ஓராதெடுத் தார்த்தான்முடி யொருபஃதவை நெரித்துக்*
*கூரார்தரு கொலைவாளொடு குணநாமமுங் கொடுத்த*
*ஏரார்தரு மிறைவர்க்கிடம் இடும்பாவன மிதுவே"*

*(முதலாம் தி.மு: திருஇடும்பாவனம்: பா.எ:8)*

வானவெளியில் தேர்மிசை ஏறிவந்த ஒளி பொருந்திய வாளையும் பற்களையும் உடைய அரக்கனாகிய இராவணன், சிவபிரான் எழுந்தருளிய கயிலை மலையின் சிறப்பை ஓராது, தன்தேர் தடைப்படுகிறது என்ற காரணத்திற்காக மலையைப் பெயர்த்துச் செருக்கால் ஆரவாரம் செய்ய, அவன் பத்துத் தலைமுடிகளையும் நெரித்தபின் அவன் வருந்திவேண்ட, கருணையோடு கூரிய கொலைவாள், பிற நன்மைகள், இராவணன் என்ற

பெயர் ஆகியவற்றைக் கொடுத்தருளிய அழகனாகிய இறைவற்கு இடம் இடும்பாவனம் என்றவாறு பாடியுள்ளார்.

*"அந்தரத்திற் றேரூரு மரக்கன்மலை யன்றெடுப்பச்*
*சுந்தரத்தன் றிருவிரலா லூன்றஅவன் உடல்நெரிந்து*
*மந்திரத்த மறைபாட வாளவனுக் கீந்தானும்*
*கொந்தரத்த மதிச்சென்னிக் கோளிலியெம் பெருமானே"*

*(முதலாம் தி.மு: திருக்கோளிலி: பா.எ:8)*

*"பண்மொய்த்த வின்மொழியாள் பயமெய்த மலையெடுத்த*
*உன்மத்த னுரநெரித்தன் றருள்செய்தா னுறைகோயில்...."*

*(இரண்டாம் தி.மு: திருவெண்காடு: பா.எ:8)*

இதன்மூலம் பண்ணிசை போலும் இனிய மொழியினளாகிய பார்வதிதேவி அஞ்சுமாறு கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த பித்தனாகிய இராவணனின் மார்பை நெரித்துப்பின் அருள்செய்த சிவபிரான் உறையும் கோயில் என்கின்றார் சம்பந்தர்.

*"தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்தோள்*
*தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த தலைவனார்...."*

*(இரண்டாம் தி.மு: திருக்கேதீச்சரம்: பா.எ:8)*

தென்னிலங்கை மன்னனாகிய இராவணன் கயிலைமலையை நெருக்கி எடுத்தபோது அவன் முடி, தோள் ஆகியன அழகிழக்குமாறு அடர்த்துப் பின் அவனது பாடல்கேட்டு அருள்செய்த தலைவனார் என சிவன் சிறப்பிக்கப்படுகின்றார்.

*"காதமரும் வெண்குழையீர் கறுத்தவரக்கன் மலையெடுப்ப*
*மாதமரு மென்மொழியாண் மறுகும்வண்ணங் கண்டுகந்தீர்...."*

*(இரண்டாம் திமு: திருநல்லூர்: பாடல்எண்:8)*

காதில் பொருந்திய வெண்குழையை உடையவரே! சினந்து வந்த இராவணன் கயிலையைப் பெயர்க்கக் காதல் விளைக்கும் மெல்லிய மொழியினை உடையாளாகிய உமையம்மை கலங்க, அதனைக் கண்டு உகந்தவரே! என சம்பந்தர் சிவனை விளிக்கிறார்.

*"இலங்கையர் மன்னனாகி யெழில் பெற்ற விராவணனைக்*
*கலங்கவொர் கால்விரலாற் கதிர் பொன்முடி பத்தலற*
*நலங்கெழு சிந்தையனா யருள் பெற்றலு நன்களித்த*
*வலங்கெழு மூவிலைவே லுடை யானிடம் வக்கரையே"*

*(மூன்றாம் தி.மு: திருவக்கரை:பா.எ: 8)*

இலங்கை மன்னனான அழகிய இராவணன் கலங்குமாறு, சிவபெருமான் தன் காற்பெருவிரலை ஊன்றி, ஒளி வீசுகின்ற பொன்னாலான திருமுடி களணிந்த அவன் தலைகள் பத்தும் அலறுமாறு செய்தார். பின் இராவணன் செருக்கு நீங்கி, நல்ல சிந்தனையோடு இறைவனைப் போற்றிசைக்க, திருவருளால் இறைவன் அவனுக்கு வீரவாளும், நீண்ட வாழ்நாளும் கொடுத்து அருள் புரிந்தார். இதன் மூலம் இராமாயணத்தில் இராவணன் பெருவீரனாகவும், வலி படைத்த ஆயுதங்களைக் கொண்டவனாகவும் சித்திரிக்கப்படுகின்ற விடயத்தை சம்பந்தர் கையாள்கின்றார். அதேபாங்குடன் மேல்வரும் பாடலையும் சம்பந்தர் பாடுகின்றார்.

*"எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா லேத்திட வாத்தமாம் பேறுதொடுத்தவர்......"*

*(மூன்றாம் தி.மு: திருக்கோணமலை: பா.எ: 8)*

கயிலைமலையை எடுத்த இராவணனின் செருக்கைத் தம் திருப்பாதவிரலை ஊன்றி அழித்தவர் சிவபெருமான். பின் அவன் ஏத்திப் போற்ற விருப்பத்துடன் வெற்றி வாளும், நீண்ட வாழ்நாளும் அருளியவர்.

*"தென்றிசையி லங்கையரை யன்றிசைகள் வீரம்விளை வித்து*
*வென்றிசை புயங்களை யடர்த்தருளும் வித்தகன்......"*

*(மூன்றாம் தி.மு: திருத்தோணிபுரம் : பா.எண்: 8)*

இதனூடாக தென்திசையில் விளங்கிய இலங்கை மன்னனான இராவணன் எல்லாத் திசைகளிலும் திக்விஜயம் செய்து தனது வீரத்தை நிலைநாட்டி. வெற்றி கொண்ட தோள்களை நெருக்கிப் பின் அருளும் புரிந்த வித்தகனான சிவபெருமான் என்கிறார் சம்பந்தர். நாம் மேலே கூறிய பாடல்கள் யாவற்றிலும் கயிலை மலையைப் பெயர்த்த போது இராவணன். சிவனால் நசியுண்டமையும், பின் அவனது சாமகானத்தால் அருள் பெற்றமையும் பாடப்படுகின்றது.

இவ்வாறு, பதிகம்தோறும் சம்பந்தர் இராவணனுக்கு முக்கியத்துவம் வழங்க என்ன காரணம்? தீயவர் எவருமே இறைவனை நினைத்து வழிபட்டால், அவனது அருளைப் பெறலாம் என்பதை அனைவருக்கும் வெளிப்படுத்துவதை நோக்காகக் கொண்டு சம்பந்தர் இவ்வாறு பாடியுள்ளார் எனக்கொள்ள முடியும். ஆனால், அது மட்டுமே காரணம் எனக் கூறிவிடமுடியாது. ஏனெனில் அத்தகைய கருத்தை வெளிப்படுத்துவது மட்டுமே சம்பந்தரது நோக்கமெனின் வேறு கதை எதையும் கூறாது. குறிப்பாக இராவணன் கதையின் குறித்த பகுதியை மட்டுமே தேர்ந்தெடுக்க காரணம் என்ன என ஆராய்தல் அவசியமாகும்.

இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்கள் சங்க காலத்திலிருந்தும் வைதீக சமயப் புராணக் கதைகள் சங்கமருவிய காலத்திலிருந்தும் தமிழ் நாட்டில் வழங்கி வந்திருக்கின்றன என அக்கால இலக்கியங்களிலிருந்து அறிந்து கொள்ள முடியும். தீயோரும் சிவனை வணங்கி அருள் பெறலாம் என்பதை விளக்குவதற்கு இதைவிட பொருத்தமான கதை வேறேதும் இல்லையாதலால் இக்கதை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது சிலரது வாதமாகும். அவ்வாறாயின் பிற்காலத்தில் வாழ்ந்த சுந்தரர், மாணிக்கவாசகர், குமரகுருபரர், இராமலிங்க சுவாமிகள் முதலானோர் இராவணன் பற்றிய இக்கதைப் பகுதியை தங்கள் பக்திப்பாடல்களில் குறியாமை அவதானத்திற்குரியது. ஆனால், சமகாலத்தில் வாழ்ந்த அப்பரும் ஓரிரு பாடல்களிலேனும் இவ்விடயத்தை குறிப்பிடுகின்றார். இவர்கள் இருவரும் இச்செய்தியைப் பயன்படுத்துவதற்கு, அக்காலச் சூழ்நிலை காரணமாக இருந்திருக்கலாம்போல் தெரிகிறது.

இராவணன் ஒரு பேரரசன்; சிவனை மதியாதவன். சிவன் வாழ்விடத்தையே அப்புறப்படுத்தப் பார்த்தான். அதன் பயனாகச் சிவனால் நசியுண்டான். சிவனருள் பெற்றமையினாலேயே, அவன் பின்பு உய்வடைந்தான். அப்பரும் சம்பந்தரும் இக்கதைப் பகுதியை தங்கள் காலத்திலாண்ட மன்னர்களுக்கு எச்சரிக்கையாகப் பயன்படுத்துகிறார்கள் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது. அப்பரும் சம்பந்தரும் வாழ்ந்த காலப்பகுதி பல்லவர் காலத் தொடக்கமாகும். தமிழ்நாட்டில் இக்காலத்தில்தான் பல்லவப் பேரரசு, பாண்டியப் பேரரசு என இரு பேரரசுகள் தோன்றியுள்ளன. புதிதாகப் பேரரசு கண்டு வாழ்பவர்கள் இராவணன் போல செருக்குறுவது இயல்பு. மேலும் இரு பேரரசுகளையும் ஆட்சி புரிந்தவர்கள் சமணர்கள். அப்பர், சம்பந்தர் தொடங்கிய சைவ மறுமலர்ச்சி, அம்மன்னர் எதிர்ப்பைத் தொடக்கத்திலாவது எதிர்பார்க்கவே வேண்டும். இப்பேரரசர் அவ்வாறு எதிர்த்தால், இராவணன் போலத் துன்பமடைய நேரிடும் என்பதையே சம்பந்தர் இங்கு வெளிப்படுத்தி நிற்கின்றார் என உணரலாம். அதற்காகவே பாடல்கள் தோறும் இராவணன் பற்றிக் கூறிக்கொண்டே செல்கின்றார் என்று துணியலாம்.

### 1.2 இராமன்

இராமன் இராமாயணக் காப்பியத்தின் பாட்டுடைத் தலைவன். அயோத்தி அரசன் தசரதனுக்கும், அவனது மூன்று மனைவியருள் கோசலைக்கும் பிறந்தவனே இராமன். இளமையில் வசிட்ட முனிவரிடம் கல்வி பயின்று முனிவர் முதலிய எல்லோரும் போற்றுமாறு விளங்கினான். இராமனின் வாழ்வு உலக மாந்தர்க்கு எடுத்துக் காட்டாய் விளங்கத்தக்கது. இவன் தந்தையின் சொல் போற்றும் தனயனாய், மனைவியுடன் உளம் ஒன்றிய காதலனாய், உடன்பிறந்தார் மாட்டு அன்புடைய உண்மைச் சகோதரனாய், அன்பினால் தன்மை நயக்கும் அயலாரிடத்தும் நண்பனாய், பகைவனிடத்தும் இரக்கம் காட்டும் பண்புசால் மறவனாய், தீமையை ஒறுத்து நன்மையை நிலைநாட்டும் இலட்சிய வீரனாய் என பல்வேறு நற்குணங்களின் இருப்பிடமாக விளங்கினான். இளமைக் காலம் முதலாக பல்வேறு அருஞ்செயல்கள் புரிகின்ற இராமனை கம்பராமாயணத்தின் பலவிடங்களில் திருமாலின் அவதாரமானவன் என்று கூறப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் தனது திருவிராமேச்சுரம் மீதான பதிகத்தில் இராமன் பற்றிய தகவல்களை எடுத்தாண்டுள்ளார்.

*"தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்*
*பூவிய லும்முடி பொன்றுவித் தபழி போயற*
*ஏவிய லுஞ்சிலை யண்ணல்செய் தவிரா மேச்சுரம்...."*

*(மூன்றாம் தி.மு: திருவிராமேச்சுரம் பா.எ: 2)*

இதில் சீதாப்பிராட்டியைக் கவர்ந்த தென்னிலங்கை மன்னனான இராவணனின் தலைகளை அறுத்துக் கொன்ற பழி நீங்குமாறு அண்ணலாகிய இராமபிரான்இராமேச்சுரத்தை வழிபட்டமை பற்றிக் கூறப்படுகின்றது.

*"மானன நோக்கியை தேவிதன் னையொரு மாயையால்*
*கானதில் வவ்விய காரரக் கன்உயிர் செற்றவன்...."*

*(மூன்றாம் தி.மு: திருவிராமேச்சுரம் பா.எ:3)*

*"பகலவன் மீதியங் காமைக்காத் தபதி யோன்றனை*
*இகலழி வித்தவ னேத்துகோ யிலிரா மேச்சுரம்..."*

*(மூன்றாம் தி.மு: திருவிராமேச்சுரம்: பா.எ :11)*

தான் பெற்ற வரத்தின் வலிமையால் சூரியன் தன் நகருக்கு மேலே செல்லக் கூடாது என்று ஆணையிட்ட இலங்கைக் கோனாகிய இராவணனைப் போரில் அழித்த இராமபிரான் வழிபட்ட கோயிலாகிய இராமேச்சுரம் என பாடுவதனூடாக இராமாயணத்தில் பாடப்படும் இராவணனை இராமன் அழித்த செய்தியை திருஞானசம்பந்தர் கையாண்டுள்ளார். இப்பதிகத்தின் 4,6,7,8,10 ஆம் பாடல்களிலும் இவ்விடயம் பொருத்தமுற அவரால் எடுத்தாளப்பட்டுள்ளது. இதன்மூலம் இராமாயணத்தின் நாயகனான இராமன் போர் வரன்முறைக்குட்பட்டு தாம் செய்த வதத்திற்காக பாவ விமோசனம் தேட விளைகின்றார் என்ற உண்மையை மிக ஆழமாக அனைவரது மனதிலும் சம்பந்தர் பதித்துச் சென்றுள்ளார்.

## 1.3 இலக்குமணன்

இலக்குமணன் தசரனது மூன்றாம் மனைவியான சுமத்திரையின் மகனாவான். இராமனைப் பிரியாது என்றும் உடனிருந்து தொண்டு செய்யும் பேறு பெற்றவன். திருமாலின் ஆதிசேடனே இலக்குமணனாகத் தோன்றினான் எனக் குறிப்பிடப்படுகின்றது. இவன் அன்பன், அறவோன், ஆற்றல் வல்லான், அறிஞன். இராமனுக்கு உகந்தன எல்லாம் செய்தலையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவன். இராமன் நினைந்தவாறெல்லாம்தவறாமல் செயற்பட்டவன். அண்ணன் இராமனது நலத்தையே தன்னலமாக நினைத்து மகிழ்ந்தவன். இவ்வாறே இராமன் கேட்டைத் தன்கேடாக எண்ணி பெரிதும் வருந்தியதுடன், அக்கேட்டிற்குரிய இடர்களை எதிர்த்துச் சீற்றம் கொண்டவன். தன்உயிர் தந்தேனும் தன்னைச் சார்ந்தோர் உயிரைக் காக்கும் பெரும் பண்புடையவன். இத்தகைய பாத்திரப்படைப்பான இலக்குமணன் பற்றி சம்பந்தர் தமது பாடலின் ஓரிடத்தில் பாடியுள்ளார்.

*"நீரிடைத் துயின்றவன் றம்பி....."*

*(மூன்றாம் தி.மு: திருவுசாத்தனம்: 3150)*

இங்கு பாற்கடலில் துயில்கின்ற திருமாலின் அவதாரமான இராமனுடைய தம்பி என இலக்குமணன் அறிமுகப்படுத்தப்படுகின்றான்.

## 1.4 வாலி

பம்பை நதிக்கரையில் அமைந்த கிட்கிந்தை என்ற நகரை ஆண்ட குரங்கரசனே வாலியாவான். இவன் மிகப் பலம் பொருந்தியவன். ஒருமுறை இலங்கை அரசன் இராவணனுடன் போரிட்டு அவனை வென்றான். தனது தம்பியான சுக்ரீவன் உண்மையறியாது செய்த ஒரு தவறிற்காக அவனைக் கொல்ல முயற்சித்ததுடன், அவன் மனைவி உருமையையும் தனக்கு உரிமையாக்கிக் கொண்டான். இவனுக்கு பயந்து ஒளிந்து வாழ்ந்த சுக்ரீவன் சீதையைத் தேடி வந்த இராமனைச் சந்தித்து நண்பனாகினான். இராமன் மூலமாக வாலியைக் கொன்றான். இது பற்றிக் கூறும் கம்பராமாயணம்

'இரவிதன் புதல்வன் தன்னை, இந்திரன் புதல்வன் என்றும், பரிவு இலன் சீற போந்து, பருவரற்கு ஒருவன் ஆகி' என்று வர்ணிக்கின்றது. இவ்வாறு அறிமுகமாகின்ற மிகப் பலம் பொருந்திய கதாபாத்திரமான வாலியைப் பற்றிய விவரத்தை சம்பந்தரது மேல்வரும் பாடல்களில் அவதானிக்க முடிகின்றது.

*"கோலமா மலரொடு தூபமுஞ் சாந்தமுங் கொண்டுபோற்றி*
*வாலியார் வழிபடப் பொருந்தினார்..."*

*(மூன்றாம் தி.மு:திருவடகுரங்காடுதுறை: பா.எ:1)*

*"நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடொல்க*
*வாலினாற் கட்டிய வாலியார்...."*

*(மூன்றாம் தி.மு:திருவடகுரங்காடுதுறை: பா.எ: 8)*

அரக்கனான இராவணனை, இருபது கரத்தொடும் வாலினாற் இறுகக் கட்டிய வாலியார் என்று வாலியின் சிறப்புப் பற்றி சம்பந்தர் பாடியுள்ளார்.

### 1.5 சுக்ரீவன், அனுமான்

சுக்ரீவன் கிட்கிந்தை அரசன் வாலியின் தம்பியாவான். வாலிக்குப் பயந்து இரலை மலையிலுள்ள மதங்கர் எனுமிடத்தில் வாழ்ந்த சுக்ரீவனுடன் நட்புக் கொண்ட இராமன் அவனுக்கு உதவும் பொருட்டு வாலியுடன் போரிட்டு அவனை மறைந்திருந்து கொன்று, இராட்சியத்தை சுக்ரீவனிடம் ஒப்படைத்தான். அனுமான் சுக்ரீவனின் நண்பன். அவர் மறைந்து வாழ்ந்த போது அனுமான் உதவியாக இருந்தார். இராமனுடன் தொடர்பை ஏற்படுத்தியதன் பின்னர் அவரது பக்தராக மாறிக் கொண்டார். சீதாபிராட்டியை கண்டுபிடிக்கும் முயற்சியில் இவரது பணி ஒப்பற்றதாகும். இவர்களைப் பற்றிய விவரத்தை சம்பந்தரது மேல்வரும் பாடலில் அவதானிக்க முடிகின்றது.

*"போருடைச் சுக்கிரீ வன்அநு மான்றொழ...."*

*(மூன்றாம் தி.மு: திருவுசாத்தனம்: 3150)*

சுக்கிரீவன், அனுமன் ஆகியோரும் தொழுது வணங்கும் இறைவன் வீற்றிருந்தருளும் இடம் திருவுசாத்தானம் எனப்பாடப்பட்டுள்ளது. இங்கு இராமாயணத்தின் இரு முக்கிய பாத்திரங்கள் பற்றிய தகவலை சம்பந்தர் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

## 1.6 சடாயு

இவர் பறவை வேந்தன்; கருடர், கந்தருவர் போல் தெய்வ நிலையினன்;அதிசய ஆற்றலும் அரிய மதிநலனும் வாய்த்தவர்;நீண்ட ஆயுளைப் பெற்றிருந்தவர். சூரியனின் சாரதியாகிய அருணனுக்கு அரம்பையிடம் பிறந்தவர். சம்பாபதி இவருக்கு உடன் பிறந்தவர். சம்பராசுரப் போரில் இவர் தசரதனுக்கு துணையாக நின்றார். இராம இலக்குமணரை தண்டக வனத்திலே கண்டு, அவர்கள் தசரதனது புத்திரர்கள் என்பதை அறிந்து அவர்கள் மீது அன்பு கொண்டு பாதுகாத்து வந்தார். இராவணன் சூழ்ச்சி செய்து சீதையை கடத்திச் செல்லும்போது, அவனது புஷ்பக விமானத்தை தடுக்கும் முயற்சியில், மிகக்கடுமையாகப் போராடி உயிர் துறந்தார். உயிர் துறப்பதற்கு முன்னர் சீதைக்கு நடந்த கொடுமை பற்றி இராம இலக்குமணரிடம் கூறிவிட்டே இறந்தார். இவரது இந்த தியாகச் செயல் பற்றி கம்பராமாயணத்தின் ஆரணிய காண்டத்தில் சடாயு உயிர் நீத்த படலத்தில் கம்பர் விரிவாகப் பாரடியுள்ளார்.

*"இடிப்பு ஒத்த முழக்கின், இருஞ் சிறை வீசி எற்றி,*
*முடிப் பத்திகளைப் படி இட்டு, முழங்கு துண்டம்*
*கடிப்பக் கடிது உற்றவன், காண்தகும் நீண்ட வீணைக்*
*கொடிப் பற்றி ஒடித்து, உயர் வானவர் ஆசி கொண்டான்"*

*(கம்.இரா: ஆரணியகாண்டம்: பா.எ: 3423)*

இடியை ஒத்த பேரொலி உண்டாகும் படி பெரிய சிறகுகளை வீசி, இராவணனது கிரீட வரிசைகளை நிலத்தில் தள்ளி, அவனது வீணைக் கொடியை ஒடித்தான். சடாயுவின் இந்தப் போராட்டத்தையும் தியாகத்தையும் பற்றி திருஞானசம்பந்தர் தமது திருப்புள்ளிருக்குவேளூர் பதிகத்தில் மேல்வருமாறு சிறப்பித்துப் பாடியுள்ளார்.

"........மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே"

(இரண்டாம் தி.மு:திருப்புள்ளிருக்குவேளூர்:பா.எ:2)

"...ஆகாயந் தேரோடு மிராவணனை யமரின்கண்
போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே"

(இரண்டாம் தி.மு:திருப்புள்ளிருக்குவேளூர்:4)

".....எண்ணின்றி முக்கோடி வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான்..."

(இரண்டாம் தி.மு:திருப்புள்ளிருக்குவேளூர்: பா.எ: 8)

## 2. சம்பந்தர் பாடல்களில் மகாபாரதச் செல்வாக்கு

### 2.1 மகாபாரதம்

மகாபாரதம் வடமொழியில் வியாசரால் எழுதப்பட்டது. இது ஆதி பருவம், சபா பருவம், வன பருவம், விராட பருவம், உத்தியோக பருவம், வீடும பருவம், துரோண பருவம், கருண பருவம், சல்லிய பருவம், சௌப்திக பருவம், இசுதிரி பருவம், சாந்தி பருவம், அனுசாசன பருவம், அசுவமேத பருவம், ஆசுரமவாசிக பருவம், மௌசல பருவம், மகாபிரத்தானிக பருவம், சுவர்க்க ஆரோகண பருவம் ஆகிய பதினெட்டுப் பருவங்களைக் கொண்டுள்ளது. குரு வம்சத்து சந்தனு மன்னனின் பரம்பரையில் திருதராட்டினர், பாண்டு எனும் இரு இளவரசர்கள் இருந்தனர். இவர்களில் திருதராட்டினருக்கும் காந்தாரிக்கும் பிறந்த நூறு ஆண்பிள்ளைகள் கௌரவர் என அழைக்கப்பட்டனர். பாண்டுவின் மனைவியான குந்திதேவி துருவாசர் மூலம் தான்பெற்ற மந்திரத்தின் மூலமாக தருமன், வீமன், அருச்சுனன் ஆகியோரையும், பாண்டுவின் இரண்டாம் மனைவியான மாத்திரி குந்தியின் உபதேசப்படி அதே மந்திரத்தின் வாயிலாக நகுலன், சகாதேவன் எனும் இரட்டையர்களையும் பெற்றாள். இவர்கள் ஐவரும் பஞ்ச பாண்டவர் எனப்பட்டனர். இந்தப் பாண்டவருக்கும் கௌரவருக்குமான தர்ம

போராட்டமாகவே மகாபாரதம் அமைகின்றது. "தர்மத்தை நிலைநாட்டுவதே இராஜ தர்மத்தின் குறிக்கோளாகும்" என்பதே மகாபாரதத்தின் முடிபாகும்.

பதிகத்திற்கு பதிகம் இராமாயணம் தொடர்பான செய்தியைக் கூறும் சம்பந்தர் மகாபாரதக் குறிப்புகளை மிக அரிதாகவே கையாண்டுள்ளார். பாண்டவர்களில் அருச்சுனன் பற்றிய விடயங்களையே சம்பந்தர் அதிகம் கையாண்டுள்ளார்.

## 2.2 அருச்சுனன்

குந்திதேவி உச்சரித்த மந்திரத்தின் பயனாக இந்திரனின் மூலமாக அருச்சுனன் பிறந்தான். கௌரவரின் சூழ்ச்சிக்கு பலியாகி, சூதாட்டத்தின் மூலம் மனைவி உட்பட அனைத்தையும் தருமன் இழந்தமையால் பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் சென்றனர். அக்காலத்தில் அருச்சுனன் இமயமலைக்குச் சென்று அங்கு சிவனை நோக்கித் தவமியற்றி, சிவனிடமிருந்து பாசுபதம் எனும் தெய்வீக அம்பைப் பெற்றான். பின்பு விண்ணுலகம் சென்று இந்திரனின் ஆதரவால் தெய்வீகப் படைக்கலங்களை பயன்படுத்தும் முறைகளையும் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். பின் அவன் பாண்டவர்களுடன் இணைந்து கொண்டான். வனத்தில் வாழவேண்டிய பன்னிரண்டு ஆண்டுகள் முடிவுற்றதன் பிறகு, கௌரவரின் ஆணைப்படி ஓராண்டு காலம் மறைந்து வாழவேண்டும். அதன்படி அவர்கள் விராட நகருக்குச் சென்று தம்மை இன்னார் என்று வெளிப்படுத்தாது மாறுவேடத்தில் வாழ்ந்தனர். இதன்போது அருச்சுனன் பேடியாக உருமாறி பிருகன்னளை என்ற பெயருடன் உத்தரை என்ற விராட மன்னன் மகளுக்கு ஆடல், பாடல் கற்பிக்கும் பணியில் அமர்ந்தான்.

திருஞானசம்பந்தர் அருச்சுனன் சிவனிடமிருந்து பாசுபதம் பெற்ற செய்தியையே பலவிடங்களிலும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கு மேல்வரும் பாடல்களைச் சான்றாகக் கூறமுடியும்.

*"....பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்*
*கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே"*

*(முதலாம் தி.மு: திருக்கோளிலி : பா.எ:5)*

'பஞ்சவரிற் பார்த்தனுக்கு' என்ற வரியானது பாண்டவர் ஐவரில் ஒருவனான அருச்சுனனைக் குறிக்கின்றது. அவனுக்குப் பாசுபதம் என்னும் அத்திரத்தை சிவன் வழங்கியமை பற்றிப் சம்பந்தர் பாடியுள்ளார்.

*"வசையறு வலிவன சரவுரு வதுகொடு நினைவரு தவமுயல்*
*விசையன திறன்மலை மகளறி வுறுதிற லமர்மிடல் கொடுசெய்து*
*அசைவில படையருள் புரிதரும் அவனுறை பதியது மிகுதரு*
*திசையினின் மலர்குல வியசெறி பொழின்மலி தருதிரு மிழலையே"*

*(மூன்றாம் தி.மு : திருவீழிமிழலை : பா.எ 6)*

குற்றமற்ற வலிய வேடர் உருவைக் கொண்டு, நினைதற்கும் அரிய கடுந்தவத்தைச் செய்யும் விசயனுடைய(அர்ச்சுனன்) வலிமையை உமையம்மைக்கு அறிவுறுத்தும் வகையில் அவனோடு வலிய போரைச் செய்து அவ்விசயனுக்கு சிவன் தோல்வி எய்தாத பாசுபதக் கணையை வழங்கி அருள்புரிந்த செய்தியை சம்பந்தர் இங்கு பதிவு செய்துள்ளார்.

*".....வின்னெடும் போர்விறல் வேடனா கிவிச யற்கொரு*
*பொன்னெடுங் கோல்கொடுத் தானுமந்..."*

*(மூன்றாம் தி.மு: திருப்புகலி: பா.எ 8)*

*"....விறலாய வெங்குருவும் வேணுபுரம் விசயன் மேலம் பெய்து..."*

*(மூன்றாம் தி.மு: திருக்கழுமலம்: பா.எ 8)*

*"...காடடைந்த வேனமொன்றின் காரண மாகிவந்து*
*வேடடைந்த வேடனாகி விசயனொ டெய்ததென்னே"*

*(முதலாம் தி.மு: திருச்சேய்ஞலூர்: பா.எ 6)*

மகாபாரதம், இராமாயணம்ஆகிய இரு இதிகாசங்களின் செல்வாக்கை சம்பந்தரது தேவார பதிகத்தில் அதிகமாகவே காணமுடிகின்றது. அதிலும் இராமாயண சம்பவங்கள் தொடர்பில் சம்பந்தர் அதிக கவனத்தைச்

செலுத்தியுள்ளார். இராவணனது செருக்கின் காரணமாக அவன் அடைந்த துன்பம் பற்றியும், சிவனை சரணடைந்ததன் பின்னர் அவன் பெற்ற நன்மைகளையும் அதிகள்விற் கூறுவதன் மூலம் சமகாலச் சூழ்நிலையை அவர் கருத்திற் கொண்டுள்ளமை புலனாகின்றது. பொதுவாக நோக்குகின்றபோது மகாபாரதம், இராமாயணம் என்பன காலத்தின் தேவைக்கும், சைவத்தின் வளர்ச்சிக்கும் சம்பந்தரால் பொருத்தமான முறையில் கையாளப்பட்டுள்ளன எனக்கொள்ளமுடியும்.